**MCOP NO:980/2023 DATE: 06.01.2026**

ம.சா :1

பெயர் : திரு.முத்தலிபு

த/பெ : திரு.காஜா மைதீன்

வயது : 20

**மசா1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 2022ம் வருடம் கடைசியில் நடந்தது. தேதி, மாதம் நியாபகம் இல்லை. நான் விபத்தின் பொழுது இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றேன். இருசக்கர வாகனத்தை அக்கீம் என்பவர் ஓட்டினார். இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியாது. ஆனால் அது ஸ்பெலன்டர் வாகனமாகும். விபத்து சமயத்தில் நான் அமர்ந்து சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிய அக்கீம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் பழுகுநர் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தார். விபத்து சமயத்தில் எனக்கு வயது 17 என்றால் சரிதான். எனக்கும் ஓட்டுநர் உரிமம் கிடையாது. நான் வாகனத்தில் அமர்ந்து செல்லும் போது தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். தலைகவசம் அணியாமல் நான் வாகனத்தில் அமர்ந்து சென்றதால் அது மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு முரணானது என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. விபத்தின் பொழுது நான் ஐ.டி.ஐ படித்துக் கொண்டிருந்தேன். விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக நான் எத்தனை நாட்கள் விடுமுறை எடுத்தேன் என்ற விவரங்களை நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. நான் எனது படிப்பை முடித்துவிட்டேன். இந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் எனக்கு உடல்ரீதியாகவோ, வருமான ரீதியாகவோ எந்த இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் 20 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். அதற்கு பின்னிட்டு நான் தொடர்சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் பயணம் செய்த வாகனத்தின் மீது மோதிய லாரியின் பதிவு எண் 3942 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான மசாஆ 9 ஆன குற்றப்பத்திரிக்கையில் விபத்தின் போது லாரியின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதற்காக அவர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ரூ.5000 அபராத தொகை செலுத்தப்பட்டார் என்றும், மேலும் லாரி ஓட்டுநர் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் பெறவில்லை என்பதாலும் அவர் அபராத தொகை செலுத்தியுள்ளார் என்றும் காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் காட்டப்பட்டுள்ளது. முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் லாரி ஓட்டுநர் வாகனத்தை இயக்குவதற்கு 1ம் எதிர்மனுதாரர் அனுமதி கொடுத்த

செயலானது மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு முரணானது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், நான் ஏதேனும் இழப்பீடு பெற வேண்டும் என்றால் அதை 1ம் எதிர்மனுதாரரிடம் தான் பெற வேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 06.01.2026ல் சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.